# முன்பள்ளி வெளிக்கள அலுவலர் நிகழ்ச்சித்திட்டம்

## முன்பள்ளி வெளிக்கள அலுவலர் (PSFO) நிகழ்ச்சித்திட்டம் என்றால் என்ன?

PSFO நிகழ்ச்சித்திட்டம் விக்டோரியா அரசாங்கத்தின் நிதியுதவியுடன் கூடிய மழலையர் பள்ளி (Kindergarten) சேவைகளுக்கு நடைமுறை ஆலோசனை மற்றும் ஆதரவை வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது, இது கூடுதல் தேவைகளைக் கொண்ட குழந்தைகளின் உள்ளடங்கல், அணுகல், கற்றல் வளர்ச்சி மற்றும் அர்த்தமுள்ள பங்கேற்பு ஆகியவற்றை வழங்குவதற்கான கொள்திறனை உருவாக்குகிறது.

PSFO க்கள் தகவல், வளங்கள், நிகழ்ச்சித்திட்ட உத்திகள், குழந்தையின் கூடுதல் தேவைகளை கல்வியாளர் அடையாளம் காண்பதில் பங்களித்தல், கல்வியாளருக்கு பயிற்சி அளித்தல், குறிப்பிட்ட உத்திகளை மாதிரியாக்குதல் மற்றும் பரிந்துரை வழிகளை அடையாளம் காண்பது உள்ளிட்ட பல்வேறு ஆதரவுகளை வழங்குகின்றன. கூடுதல் தேவைகளைக் கொண்ட குழந்தைகளின் தேவைகளுக்குப் எதிர்வினையாற்றக்கூடிய வகையில் ஓர் உள்ளடக்கிய மழலையர் பள்ளி நிகழ்ச்சித்திட்டத்தைத் திட்டமிடுவதற்கும் வழங்குவதற்கும் கல்வியாளர்களுக்கு அவர்களின் நம்பிக்கை, அறிவு மற்றும் திறன்களை வளர்க்க இந்த ஆதரவுகள் உதவுகின்றன.

## PSFO சேவைக்கு யார் தகுதியானவர்?

விக்டோரிய அரசாங்கத்தின் நிதியுதவி பெறும் அனைத்து மழலையர் பள்ளி நிகழ்ச்சித்திட்டங்களும் மழலையர் பள்ளி நிகழ்ச்சித்திட்டத்தில் கூடுதல் தேவைகள் உள்ள குழந்தைகளின் அணுகல், உள்ளடங்கல் மற்றும் பங்கேற்பை ஆதரிக்க PSFO சேவையைப் பெற தகுதியுடையவை. இதில் நான்கு வயது மழலையர் பள்ளி, நிதியளிக்கப்பட்ட மூன்று வயது மழலையர் பள்ளி மற்றும் ஆரம்ப தொடக்க மழலையர் பள்ளி ஆகியவற்றில் சேர்ந்த குழந்தைகளும் அடங்கும்.

## கூடுதல் தேவைகள் கொண்ட குழந்தைகள்

PSFO நிகழ்ச்சித்திட்டமானது கூடுதல் தேவைகளைக் கொண்ட குழந்தைகளை, வளர்ச்சி தொடர்பான கவலைகளை வெளிப்படுத்தும் குழந்தைகளென வரையறுக்கிறது. வளர்ச்சி தொடர்பான கவலைகள், மொழி சார்ந்த தாமதங்கள் அல்லது சவாலான நடத்தைகள் முதல் பல சிறப்புத் தேவைகள் உள்ள குழந்தைகள் வரை குழந்தைகளின் வளர்ச்சியின் எந்தப் பகுதியுடனும் தொடர்புடையதாக இருக்கலாம். மனநலப் பேரதிர்ச்சியின் விளைவாக் கூடுதல் தேவைகளைக் கொண்ட குழந்தைகளும் PSFO பரிந்துரைக்கு தகுதியுடையவர்கள்.

ஒரு குழந்தையின் வளர்ச்சிக்கு தேசிய ஊனமுற்றோர் காப்பீட்டுத் திட்டம் (NDIS) அல்லது ஆதரவு வழங்குநரின் ஆரம்பகாலக் குழந்தைப் பருவத் தலையீடு

© விக்டோரியா மாநிலம் (கல்வி மற்றும் பயிற்சித் துறை) 2021. குறிப்பிடப்பட்டதைத் தவிர, இந்த ஆவணத்தில் உள்ள உள்ளடக்கம் ஒரு பொதுவான புத்தாக்கப் பண்புக்கூற்று 4.0 சர்வதேசம் என்பதன் கீழ் வழங்கப்பட்டுள்ளது முழு பதிப்புரிமை அறிவிப்பைச் தயவுசெய்து பார்க்கவும்.

தொடர்ச்சி ஆதரவு அளிக்கப்பட்டால், ஆரம்பகாலக் குழந்தைப் பருவக் கல்வியாளர் குடும்பத்துடன் கலந்தாலோசித்து முதல் நிகழ்வில் இந்த வழங்குநரிடம் ஆதரவைப் பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குழந்தை தனது நேரத்தைச் செலவிடுகின்ற பிற அமைப்புகளில் செயல்படுத்தப்படும் உத்திகளுடன் ஒத்துப்போகும், தங்கள் சகபாடிகளுடன் கற்றல் அனுபவங்களில் அர்த்தமுள்ள வகையில் பங்கேற்க உதவும் உத்திகளை ஆரம்பகாலக் குழந்தைப் பருவத் தலையீட்டு வல்லுநர்களால், வழங்க முடியும்.

## PSFO சேவைக்கு கட்டணம் செலுத்தப்பட வேண்டுமா?

PSFO திட்டம் அனைத்து அரசு நிதியுதவி பெறும் மழலையர் பள்ளி சேவைகளுக்கான உலகளாவிய சேவையில் எந்த கட்டணமும் இல்லாமல் கிடைக்கிறது.

## PSFO சேவையை வழங்குவது யார்?

மாநிலம் முழுவதும் PSFO சேவைகளை வழங்க கல்வி மற்றும் பயிற்சித் துறை சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதியளிக்கிறது. இந்த சேவையானது வெளிக்களம் சென்று கடமையாற்றும் (outreach) மாதிரியைப் பயன்படுத்துகிறது, மழலையர் பள்ளி திட்டம் மற்றும் சுற்றுச்சூழலுக்குள் சேவைகளை வழங்க PSFO ஐ செயல்படுத்துகிறது.

## ஒரு PSFO வின் தகுதிகள் என்ன?

மழலையர் பள்ளிக் கல்வியாளர்களின் திறனை வளர்ப்பதே PSFO இன் பங்கு என்பதால், PSFO என்பவர், உயர்தரம் மிக்க, உள்ளடக்கிய மழலையர் பள்ளித் நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடுவதிலும் வழங்குவதிலும் அனுபவமுள்ள பட்டப்படிப்புத் தகுதி பெற்ற ஆரம்பகாலக் குழந்தைப்பருவக் கல்வியாளராக இருக்க வேண்டும்.

## PSFO க்கள் குடும்பங்களுடன் இணைந்து செயல்படுகின்றனரா?

PSFO க்கள் மழலையர் பள்ளி நிகழ்ச்சித்திட்டத்தின் சூழலில் வேலை செய்கின்றனர். PSFO மழலையர் பள்ளி அமைப்பிற்குள் ஒரு குழந்தைக்கு நேரடியாக தலையீட்டை மேற்கொள்ளாது, ஆனால் ஆரம்பகாலக் குழந்தைப்பருவக் கல்வியாளருக்கு ஆலோசகராகவும் பயிற்சியாளராகவும் செயற்படுகிறது. இந்த அணுகுமுறையானது மழலையர் பள்ளி அமைப்பில் குழந்தை மற்றும் குடும்பத்துடன் நேரடித் தொடர்பை உள்ளடக்கியதாக இருக்கலாம், இருப்பினும், குழந்தை மற்றும் குடும்பத்துடன் கல்வியாளரின் தற்போதைய உறவை மதிக்கும் வகையில், ஆரம்பகாலக் குழந்தைப்பருவக் கல்வியாளருடன் இணைந்து இந்த வேலை செய்யப்படுகிறது. PSFO மழலையர் பள்ளி சூழலில் குழந்தையை நேரடியாகக் அவதானிக்கலாம் மற்றும் குழந்தையின் திறன்கள் மற்றும் அவர்களின் கற்றல் மற்றும் மேம்பாட்டுத் தேவைகள் குறித்த கல்வியாளரின் மதிப்பீட்டிற்கு பங்களிக்கலாம். கல்வியாளருக்குக் குடும்பங்களை அடையாளம் காணவும், கிடைக்கக்கூடிய பல்வேறுபட்ட ஆதரவுகளுடன்

© விக்டோரியா மாநிலம் (கல்வி மற்றும் பயிற்சித் துறை) 2021. குறிப்பிடப்பட்டதைத் தவிர, இந்த ஆவணத்தில் உள்ள உள்ளடக்கம் ஒரு பொதுவான புத்தாக்கப் பண்புக்கூற்று 4.0 சர்வதேசம் என்பதன் கீழ் வழங்கப்பட்டுள்ளது முழு பதிப்புரிமை அறிவிப்பைச் தயவுசெய்து பார்க்கவும்.

இணைக்கவும் PSFOக்கள் உதவுகின்றன மற்றும் மழலையர் பள்ளித் நிகழ்ச்சித்திட்டத்தில் குழந்தைகளுக்கான கல்வியாளர் நிகழ்ச்சித்திட்டத்தைத் திட்டமிடுவதற்கும் உதவுகின்றன.

PSFO சேவையானது, ஆரம்பகாலக் குழந்தைப்பருவக் கல்வியாளர்களுக்கு கூடுதல் தேவைகளைக் கொண்ட குழந்தையின் தனிப்பட்ட தேவைகளுக்குப் எதிர்வினையாற்ற உதவுவதால், PSFO உதவிக்கு முன், ஆரம்பகாலக் குழந்தைப்பருவக் கல்வியாளர், பெற்றோர்/பாதுகாவலர்/ பராமரிப்பாளர்களிடம் இருந்து PSFO ஈடுபாட்டிற்குத் தகவலறிந்த ஒப்புதலைப் பெற வேண்டும்.

## PSFO நிகழ்ச்சித்திட்டத்தை பெற்றோர் தொடர்பு கொள்ளமுடியுமா?

நிதியுதவி பெறும் மழலையர் பள்ளித் நிகழ்ச்சித்திட்டங்களில் குழந்தைகளின் வளர்ச்சியைப் பற்றிக் கவலைப்படும் குழந்தைகளின் பெற்றோர்கள், முதலில் தங்கள் குழந்தையின் ஆரம்பகாலக் குழந்தைப்பருவக் கல்வியாளரிடம் இதைப் பற்றிக் கலந்துரையாட வேண்டும். ஒரு பெற்றோர் PSFO நிகழ்ச்சித்திட்டத்தை நேரடியாகத் தொடர்புகொண்டால், பரிந்துரையினை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவதற்காக தொடர்புடைய கல்வியாளருடன் PSFO தொடர்புகொள்ளும்.

## ஆரம்பகாலக் குழந்தைப்பருவக் கல்வியாளர்களின் கொள்திறன் வளர்த்தல் என்பதன் பொருள் என்ன?

PSFO கொள்திறன் வளர்த்தல் அணுகுமுறை மழலையர் பள்ளி கல்வியாளர்களை ஆதரிக்கிறது:

- நடைமுறைகளை நம்பிக்கையுடன் செயல்படுத்த அறிவு மற்றும் திறன்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் உள்ளடக்கிய மழலையர் பள்ளி சூழலில் கூடுதல் தேவைகளைக் கொண்ட குழந்தைகளின் தனிப்பட்ட திறன்கள், ஆர்வங்கள் மற்றும் தேவைகளுக்கு எதிர்வினையாற்றக்கூடிய நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குதல்
- கூடுதல் தேவைகளைக் கொண்ட குழந்தைகளின் கற்றல் மற்றும் மேம்பாட்டிற்கான ஆதரவை வழங்கக்கூடிய சிறப்புத் திறன்களைக் கொண்ட நிபுணர்கள் மட்டும் அல்லர், மழலையர் பள்ளித் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ள அனைத்து குழந்தைகளுக்காகவும் திட்டமிடும் பொறுப்பு மற்றும் திறன் ஆகிய இரண்டையும் தாங்கள் கொண்டிருக்கின்றனர் என்றும் கருதுகின்றனர்.
- குழந்தையின் வளர்ச்சி தொடர்பான, பெற்றோரின் கவலைகளுக்குப் பதிலளிக்கின்றது

மேலும் தகவலுக்கு, முன்பள்ளி வெளிக்கள அலுவலர் நிகழ்ச்சித்திட்டத்தைப்பார்வையிடவும்.

© விக்டோரியா மாநிலம் (கல்வி மற்றும் பயிற்சித் துறை) 2021. குறிப்பிடப்பட்டதைத் தவிர, இந்த ஆவணத்தில் உள்ள உள்ளடக்கம் ஒரு பொதுவான புத்தாக்கப் பண்புக்கூற்று 4.0 சர்வதேசம் என்பதன் கீழ் வழங்கப்பட்டுள்ளது முழு பதிப்புரிமை அறிவிப்பைச் தயவுசெய்து பார்க்கவும்.



## மழலையர் பள்ளி திட்டங்களுக்கு கிடைக்கும் பிற ஆதரவுகள்

PSFO வின் பங்கு மற்றய சிறப்புச் சேவைகள் மற்றும் மழலையர் பள்ளி ஆதரவுகள் மூலம் வழங்கப்படும் பல்வேறு உதவிகளைக் குறநிறைவு செய்கிறது:

- ஆரம்பகாலக் குழந்தைப்பருவக் கல்வியாளர்களின் தொழில்முறை வளர்ச்சி
- தரம் மற்றும் ஒழுங்குமுறை ஆரம்பகாலக் குழந்தைப்பருவக் கல்வி மற்றும் பராமரிப்பு ஆதரவுகள்
- ஆரம்ப ஆண்டுகள் மேலாண்மை நிறுவனங்கள்
- LOOKOUT கல்வி மற்றும் ஆதரவு மையங்கள்
- Koorie ஈடுபாடுகள் ஆதரவு அலுவலர்கள் (KESOs) மற்றும் Koorie கல்வி ஒருங்கிணைப்பாளர்கள் (KECs)
- ஆரம்பகாலக் குழந்தைப்பருவத் தலையீடு வல்லுநர்கள்
- மழலையர் பள்ளி உள்ளடக்கல் ஆதரவு (KIS) நிகழ்ச்சித்திட்டம்
- ஆரம்பகாலக் கற்றலுக்கான அணுகல் (AEL)
- பள்ளித் தயார்நிலை நிதியம்
    - SRF இணைந்த சுகாதார ஆதரவு

## PSFO நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பள்ளித் தயார்நிலை நிதியம் (SRF) ஆகியவற்றின் மூலம் வழங்கப்படும் ஆதரவுகளுக்கு இடையிலான வேறுபாடு என்ன?

ஒர் ஆரம்பகாலக் குழந்தைப்பருவக் கல்வியாளர் கூடுதல் தேவைகளுடைய ஒரு தனிப்பட்ட குழந்தையை உள்ளடக்குவதில் உதவி கோருகின்றபோது அதற்கான பதிலாக PSFO சேவையானது நிதியளிக்கப்பட்ட மழலையர் பள்ளி நிகழ்ச்சித்திட்டங்களுக்குக் கிடைக்கும். PSFO வழங்கும் உத்திகள், மழலையர் பள்ளி சூழலில் தனிப்பட்ட குழந்தையின் தேவைகளைத் திட்டமிடுவதற்கும் அதற்கு எதிர்வினையாற்றுவதற்கும் ஆரம்பகாலக் குழந்தைப் பருவக் கல்வியாளரின் திறனை மேம்படுத்துகிறது.

SRF என்பது கல்விக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான கூடுதல் நிதி மற்றும் மழலையர் பள்ளி சேவையில் கலந்து கொள்ளும் குழந்தைகளின் குழுவின் கல்வித் தேவைகளை இலக்காகக் கொண்டது. தகவல் தொடர்பு (மொழி மேம்பாடு),

© விக்டோரியா மாநிலம் (கல்வி மற்றும் பயிற்சித் துறை) 2021. குறிப்பிடப்பட்டதைத் தவிர, இந்த ஆவணத்தில் உள்ள உள்ளடக்கம் ஒரு பொதுவான புத்தாக்கப் பண்புக்கூற்று 4.0 சர்வதேசம் என்பதன் கீழ் வழங்கப்பட்டுள்ளது முழு பதிப்புரிமை அறிவிப்பைச் தயவுசெய்து பார்க்கவும்.

நல்வாழ்வு (சமூக உணர்வு) மற்றும் அணுகல் மற்றும் உள்ளடங்கல் ஆகிய மூன்று முன்னுரிமைப் பகுதிகளில் குழந்தைகளின் கற்றல் மற்றும் வளர்ச்சிக்கு ஆதரவாக கல்வியாளர்கள் மற்றும் குடும்பங்களின் திறன்களையும் அறிவையும் வளர்க்கும் பல நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆதரவுகளை SRF வழங்குகிறது.

மேலும் தகவலுக்கு, பள்ளித் தயார்நிலை நிதியத்தைப் பார்வையிடவும்

© விக்டோரியா மாநிலம் (கல்வி மற்றும் பயிற்சித் துறை) 2021. குறிப்பிடப்பட்டதைத் தவிர, இந்த ஆவணத்தில் உள்ள உள்ளடக்கம் ஒரு பொதுவான புத்தாக்கப் பண்புக்கூற்று 4.0 சர்வதேசம் என்பதன் கீழ் வழங்கப்பட்டுள்ளது முழு பதிப்புரிமை அறிவிப்பைச் தயவுசெய்து பார்க்கவும்.